ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2021 பெப்புருவரி 12 |

# வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2020 திசெம்பர்

## முக்கிய பண்புகள்

| | திசெம்பர் 2020 | சன-திசெ 2020 |
|---|---|---|
| வர்த்தகப் பற்றாக்குறை | ஐ.அ.டொ.562 மில்.<br>திசெ 2019: ஐ.அ.டொ. 784 மில். | ஐ.அ.டொ.5,978 மில்.<br>சன-திசெ 2019: ஐ.அ.டொ.7,997 மில். |
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | ஐ.அ.டொ.964 மில்.<br>திசெ 2019: ஐ.அ.டொ.1,000 மில்.<br>-3.5% ஆண்டிற்கு ஆண்டு | ஐ.அ.டொ.10,077 மில்.<br>சன-திசெ 2019: ஐ.அ.டொ.11,940<br>-15.6% ஆண்டிற்கு ஆண்டு |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | ஐ.அ.டொ.1,527 மில்.<br>Dec 2019: US$ 1,784 mn<br>-14.4% ஆண்டிற்கு ஆண்டு | ஐ.அ.டொ.16,055 மில்.<br>சன-திசெ 2019: ஐ.அ.டொ.19,937 மில்.<br>-19.5% ஆண்டிற்கு ஆண்டு |

**சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்**

திசெ 2020: ஐ.அ.டொ.0.7 மில் (-99.8% ஆண்டிற்கு ஆண்டு)

சன-திசெ 2020: ஐ.அ.டொ.957 மில் (-73.5% ஆண்டிற்கு ஆண்டு)

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**

திசெ 2020: ஐ.அ.டொ.813மில் (22.2% ஆண்டிற்கு ஆண்டு)

சன-திசெ 2020: ஐ.அ.டொ.7,104மில் (5.8% ஆண்டிற்கு ஆண்டு)

| | | | |
|---|---|---|---|
| **கொபப** (முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் - தேறிய)<br>திசெ 2020: ஐ.அ.டொ. -16 மில்.<br>சன-திசெ 2020: ஐ.அ.டொ. -225 மில் | **அரச பிணையங்கள்** (தேறிய)<br>திசெ 2020: ஐ.அ.டொ. -10 மில்.<br>சன-திசெ 2020: ஐ.அ.டொ. -553 மில் | **மொத்த அலுவலர்சார் ஒதுக்குகள்**<br>திசெ 2020 இறுதியில் - ஐ.அ.டொலர் 5.7 பில்<br>(4.2 மாத இறக்குமதிகள்) | **செலாவணி வீதம்** (ஐ.அ.டொ. ஒன்றுக்கு ரூ.)<br>திசெ இறுதியில் 2019 – 181.6340<br>திசெ இறுதியில் 2020 – 186.4082 |

## பொதுநோக்கு

*நாட்டில் கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாம் அலையின் தாக்கத்திலிருந்து 2020 திசெம்பரில் வணிகப் பொருள் ஏற்றுமதிகள் மீட்சியடைந்த அதேவேளை, அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் மீது கட்டுப்பாடுகள் தொடர்ந்தமை ஒப்பீட்டளவில் குறைவான உலகளாவிய எரிபொருள் விலைகள் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு வணிகப் பொருள் இறக்குமதிகள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. ஒட்டுமொத்தமாக, வர்த்தகப் பற்றாக்குறையானது ஐ.அ.டொ. 2.0 பில்லியனால் கணிசமாக சுருக்கமடைந்தது. வரலாற்றிலேயே உயர்வான மாதாந்த உட்பாய்ச்சலை பதிவுசெய்து, தொழிலாளர் பணவனுப்பல்கள் 2020 திசெம்பரிலும் வெளிநாட்டுத் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மைக்கு தொடர்ந்தும் துணையளித்தது. நிதியியல் கணக்கில் அரசாங்க பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடு மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை இரண்டிலும் வெளிநாட்டு முதலீடு 2020 திசெம்பரில் சிறிதளவு தேறிய வெளிப்பாய்ச்சலை பதிவுசெய்தது. ஆண்டின் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 5.7 பில்லியனாக இருந்தது. 2020 காலப்பகுதியில் இலங்கை ரூபா 2.6 சதவீதத்தினால் தேய்வடைந்தது. 2020 திசெம்பர் காலப்பகுதியில் இலங்கை ரூபா குறிப்பிடத்தக்க தேய்மான அழுத்தத்தினை அனுபவித்தது. 2020 திசெம்பரிலும் அதேபோன்று 2021 இதுவரையான காலப்பகுதியிலும் செலாவணி வீதம் சில தளம்பல்களை அனுபவித்தது.*

## அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்[அ]

| வகை | திசெம்பர் 2019 ஐ.அ.டொ. மில் | திசெம்பர் 2020 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன-திசெ 2019 ஐ.அ.டொ. மில் | சன-திசெ 2020 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 1,000 | 964 | -3.5 | 11,940 | 10,077 | -15.6 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 1,784 | 1,527 | -14.4 | 19,937 | 16,055 | -19.5 |
| வர்த்தக மீதி | -784 | -562 | | -7,997 | -5,978 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 455 (ஆ) | 0.7 (இ) | -99.8 | 3,607 (ஆ) | 957 (இ) | -73.5 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 665 | 813 | 22.2 | 6,717 | 7,104 | 5.8 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | -5 | -16 | | -35 | -225 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 113 | 98 | | 6,570 | 2,002 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் (மொத்தம்) | 17 | 16 | | 596 | 120 | |
| நீண்ட காலக் கடன்கள் (மொத்தம்) | 96 | 81 | | 1,573 | 1,882 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் (மொத்தம்) | - | - | | 4,400 | - | |
| வெளிநாட்டு நேரடி முதலீடு (மொத்தம்) (உ) | | | | 793 | 548 | |
| திரண்ட நிலுவை | | | | 377 | -2,327 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) 2019 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது
(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2020 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்
(ஈ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன
(உ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் ஒன்பது மாதங்களுக்கான தரவுகள் கிடைக்கப்பெறுவதுடன் முதலீட்டுச் சபை மூலம் பதிவுசெய்யப்பட்டவாறான தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள்> பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.
. https://www.cbsl.gov.lk/en/monthly-trade-bulletin

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக நியதிகள்

**ஏற்றுமதிகளில் வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிகளில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சியொன்றின் காரணமாக 2019 திசெம்பரில் பதிவாகிய ஐ.அ.டொலர் 784 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 562 மில்லியனுக்கு ஐ.அ.டொலர் 222 மில்லியனால் 2020 திசெம்பரில் வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறை சுருக்கமடைந்தது.**

மேலும், வர்த்தகக் கணக்கின் திரண்ட பற்றாக்குறையானது 2019 இல் பதிவாகிய ஐ.அ.டொலர் 7,997 மில்லியன் கொண்ட பற்றாக்குறையிலிருந்து ஐ.அ.டொலர் 5,978 மில்லியனுக்கு சுருக்கமடைந்தது. இப்பெறுபேற்றுக்கான முக்கிய பங்களிப்புக் காரணிகள் வரைபடம் 1இல் காட்டப்பட்டுள்ளன.

வர்த்தக நியதிகள், அதாவது இறக்குமதிகளின் விலைக்கான ஏற்றுமதிகளின் விலை விகிதாசாரமானது உயர்வான ஏற்றுமதி விலைகள் மற்றும் குறைவான இறக்குமதி விலைகள் மூலம் 2019 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2020 திசெம்பரில் 3.2 சதவீதத்தினால் மேம்பட்டது.

**வரைபடம்: 1 : 2020 சனவரி – திசெம்பர் வரை வர்த்தகப் பற்றாக்குறை வீழ்ச்சிக்கு பங்களித்த முக்கிய காரணிகள், ஐ.அ.டொ. மில்லியன்**




**மூலங்கள்:** இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2019 – 2020)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: வர்த்தக நியதிகள் - 2020**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகள் செயலாற்றம்

**வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாம் அலையின் காரணமாக முன்னைய இரண்டு மாதங்களிலும் நிலவிய பின்னடைவிலிருந்து பாரியளவில் வீழ்ச்சியடைந்தன.** இலங்கையில் படிப்படியான முடக்கல் தளர்த்தப்பட்டமை மற்றும் ஏற்றுமதி அடைவிடங்களிலிருந்தான அதிகரித்த கேள்வி என்பன இப்பெறுபேற்றுக்கு பங்களித்தன. 2020ஆம் ஆண்டில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொ. 10,077 மில்லியனாக முன்னைய ஆண்டிலிருந்து 15.6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியொன்றினை பதிவுசெய்தது. இலங்கையில் கொவிட் - 19 முதலாம் மற்றும் இரண்டாம் அலைகளின் போது முடக்கல்கள் மூலம் ஏற்பட்ட உற்பத்திக்கான இடையூறுகளினதும் அதேபோன்று குறைவான உலகளாவிய கேள்வி மற்றும் உலகளாவிய வழங்கல் சங்கிலிகளுக்கான இடையூறுகள் என்பவற்றின் பெறுபேறொன்றாக இது அமைந்திருந்தது.

**கைத்தொழில் ஏற்றுமதிகள்:** கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2019 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2020 திசெம்பரில் 5.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இதற்கு புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதி 6.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை, பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதி 43.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஆடை ஏற்றுமதி சிறிதளவு அதிகரித்த அதேவேளை, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஏனைய அடைவிடங்களுக்கான ஏற்றுமதிகள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தன. நீர்க்கல மற்றும் விமான எரிபொருள் மற்றும் ஏனைய பெற்றோலிய உற்பத்திகளை உள்ளடக்குகின்ற பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் விநியோகிக்கப்பட்ட அளவுகள் அதேபோன்று விலைகள் வீழ்ச்சியின் காரணமாக வீழ்ச்சியடைந்தது. மேலும், இறப்பர், டயர்கள், இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணம், விலங்குத்தீன், தோல், பயணப் பொருட்கள், காலணி இன் கீழ் அனேகமான பொருட்கள் அத்துடன் அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் (செம்பு மற்றும் அதன் பொருட்கள் தவிர) ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன. மறுகரத்தில், சத்திரசிகிச்சை மற்றும் ஏனைய கையுறைகள் ஏற்றுமதி குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை (பிரதானமாக ஏனையவற்றுக்கு மத்தியில் தேங்காய்ப்பால் மற்றும் கிறீம் மற்றும் தயாரிக்கப்பட்ட புகையிலை,); பொறிகள், பொறிச் சாதனங்கள் (இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் கைத்தொழில் பொறிகள்); விவசாய உற்பத்திகள் (செயற்படுத்தப்பட்ட காபன்); செரமிக் உற்பத்திகள் (பிரதானமாக மேசைப் பொருட்கள், சமயலறைப் பொருட்கள், சுவரோடுகள் மற்றும் அலங்காரப் பொருட்கள்) சில மர மற்றும் கடதாசி உற்பத்திகள் ஆகிய ஏற்றுமதியில் பாரியளவு அதிகரிப்புக்களும் பதிவாகியுள்ளது.

**வேளாண்மை ஏற்றுமதிகள்:** வாசனைப் பொருள் (மிளகு, கருவா, சாதிக்காய், சாதிக்காய்த் துருவல்,) தேயிலை, தேங்காய் உள்ளீடு மற்றும் உள்ளீடற்ற உற்பத்திகள் அத்துடன் இயற்கை இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதியில் அதிகரிப்பு காரணமாக விவசாயப் பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள், 2019 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2020 திசெம்பரில் 4.1 சதவீதத்தினால் அதிகரித்தது. ஏற்றுமதிசெய்யப்பட்ட அளவின் அதிகரிப்பு சிறிதளவாக இருந்தமையினால் அலகு விலையில் அதிகரிப்பு தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய் அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக அமைந்தது. 2019 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2020 திசெம்பரில் ஏற்றுமதி வருவாய்களில் வீழ்ச்சியினைப் பதிவுசெய்த வேளாண்மை உற்பத்திகளாக கடலுணவு, சிறு வேளாண்மை உற்பத்திகள் (பழங்கள், பாக்கு, வெற்றிலை போன்றன), தயாரிக்கப்படாத புகையிலை மற்றும் காய்கறிகள் என்பன காணப்பட்டன.

**கனிம ஏற்றுமதிகள்:** கனிம ஏற்றுமதிகள் 2019 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2020 திசெம்பரில் அதிகரித்தன. இதற்கு புவிசார் மற்றும் கற்கள் அத்துடன் தாதுக்கள், கசடு மற்றும் சாம்பல் (பிரதானமாக டைடானியம், சிர்கோனியத் தாதுக்கள்) அதிகரித்தமை காரணமாக அமைந்தது.

**ஏற்றுமதிச் சுட்டெண்கள்:** 2020 திசெம்பரில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண்ணானது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 6.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த அதேவேளை அலகுப் பெறுமதிச் சுட்டெண், 2.7 சதவீதத்தினால் அதிகரித்தது. இது, ஏற்றுமதி வருவாய்களில் வீழ்ச்சிக்கு குறைவான ஏற்றுமதி அளவுகள் காரணமாக அமைந்தது என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றது.

வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்




மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5: மாதாந்த ஏற்றுமதி அளவுச் சுட்டெண்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | திசெம்பர் 2019 (ஐ.அ.டொ. மில்) | திசெம்பர் 2020 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-திசெ 2019 (ஐ.அ.டொ. மில்) | சன-திசெ 2020 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **798.9** | **755.5** | **-5.4** | **9,426.3** | **7,701.7** | **-18.3** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 36.1 | 41.4 | 14.5 | 447.0 | 464.0 | 3.8 |
| விலங்குத்தீன் | 11.6 | 7.8 | -32.5 | 129.0 | 102.9 | -20.2 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 483.2 | 451.8 | -6.5 | 5,596.5 | 4,423.1 | -21.0 |
| இதில் ஆடைகள் | 451.9 | 412.5 | -8.7 | 5,205.5 | 3,939.2 | -24.3 |
| புடவைகள் | 22.8 | 25.5 | 11.8 | 284.3 | 259.5 | -8.7 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 8.6 | 13.8 | 61.4 | 106.7 | 224.4 | 110.3 |
| இறப்பர் உற்பத்திகள் | 73.0 | 74.9 | 2.6 | 866.1 | 786.1 | -9.2 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 24.3 | 18.7 | -22.9 | 305.7 | 211.2 | -30.9 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 29.7 | 39.6 | 33.4 | 400.0 | 337.5 | -15.6 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 6.2 | 6.9 | 11.0 | 145.9 | 71.4 | -51.0 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 55.3 | 31.2 | -43.6 | 521.1 | 373.6 | -28.3 |
| இரசாயன உற்பத்திகள் | 12.8 | 16.7 | 30.2 | 176.3 | 172.7 | -2.0 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 9.3 | 9.7 | 4.9 | 129.4 | 99.3 | -23.3 |
| அச்சிடல் கைத்தொழில்பொருட்கள் | 3.7 | 4.5 | 19.8 | 48.3 | 47.9 | -0.8 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 7.5 | 4.4 | -40.8 | 102.9 | 53.9 | -47.6 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 5.8 | 6.0 | 4.5 | 73.5 | 176.3 | 140.0 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 13.4 | 12.1 | -10.0 | 176.5 | 110.9 | -37.2 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 2.3 | 3.2 | 34.8 | 30.1 | 24.0 | -20.2 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 24.6 | 26.7 | 8.5 | 278.1 | 247.0 | -11.2 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **195.4** | **203.3** | **4.1** | **2,461.9** | **2,336.2** | **-5.1** |
| தேயிலை | 105.8 | 113.0 | 6.8 | 1,346.4 | 1,240.9 | -7.8 |
| இறப்பர் | 1.8 | 4.6 | 155.1 | 24.2 | 30.1 | 24.4 |
| தேங்காய் | 21.8 | 26.8 | 22.6 | 329.5 | 345.2 | 4.8 |
| வாசனைத்திரவியங்கள் | 21.1 | 33.1 | 56.8 | 312.5 | 333.5 | 6.7 |
| காய்கறிகள் | 2.8 | 1.7 | -39.9 | 32.0 | 36.6 | 14.3 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.6 | 2.5 | -30.8 | 34.7 | 25.5 | -26.6 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 14.6 | 7.3 | -49.7 | 120.0 | 134.7 | 12.2 |
| கடலுணவு | 23.9 | 14.4 | -39.7 | 262.5 | 189.8 | -27.7 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **3.3** | **4.6** | **39.8** | **33.9** | **25.1** | **-25.9** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **2.4** | **1.0** | **-57.5** | **17.9** | **14.1** | **-21.4** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **999.9** | **964.5** | **-3.5** | **11,940.0** | **10,077.1** | **-15.6** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

**ஒட்டுமொத்த இறக்குமதிகள்: 2019 உடன் ஒப்பிடுகையில் 2020 திசெம்பரில் வணிகப்பொருள் இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்து 2020 மாச்சு தொடக்கம் அவதானிக்கப்பட்ட ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சிப் போக்கு தொடர்ந்தது. இதற்கு, ஒப்பீட்டளவில் குறைவான மசகெண்ணெய் விலைகள் மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்கள் இறக்குமதி மீது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் முக்கிய காரணமாக அமைந்தன.** வணிகப் பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம், 2019 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2020 திசெம்பரில் ஐ.அ.டொலர் 1,527 மில்லியனுக்கு 14.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அனைத்து முக்கிய இறக்குமதி வகைகளிலும் அதாவது நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் ஆகியவற்றில் பதிவாகிய வீழ்ச்சிகள் இப்பெறுபேற்றுக்குப் பங்களித்தன. 2020 இல் இறக்குமதிகள் மீதான மொத்த செலவினம் ஐ.அ.டொ. 16,055 மில்லியனாக 2019 இலிருந்து 19.5 சதவீத குறைவொன்றினை பதிவுசெய்தது.

**நுகர்வுப் பொருட்கள்:** 2020 திசெம்பரில் நுகர்வுப் பொருட்கள் இறக்குமதி மீதான செலவினமானது 2019 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 16.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தனிப்பட்ட பயன்பாட்டிற்கான ஊர்திகள் இறக்குமதியில் வீழ்ச்சி இதற்கு பிரதான பெறுபேறாக அமைந்தது. தனிப்பட்ட பாவனைக்கான ஊர்திகளை உள்ளடக்குகின்ற உணவல்ல நுகர்வுப் பொருட்கள் மீதான செலவினம் 30.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2020 திசெம்பரில் ஆடைகள் மற்றும் துணைப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் மலசலகூடப் பொருட்கள், அச்சிடப்பட்ட பொருட்கள் மற்றும் காகிதாதிகள் போன்ற உணவல்லா நுகர்வுப் பொருட்களின் கீழ் பல துணை வகைகளின் இறக்குமதி செலவினத்தில் பொதுவான வீழ்ச்சியொன்று பதிவாகியது. மறுகரத்தில், பல வகையான வீட்டுப்பாவனைப் பொருளுடன் சேர்த்து செல்லிடத் தொலைபேசிகள் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. உணவு மற்றும் குடிபான நுகர்வுப் பொருட்கள் 6.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. இதற்கு தேங்காய் எண்ணெய், சீனி, பால்மா மற்றும் நெத்தலிக் கருவாடு இறக்குமதியில் அதிகரிப்பு முக்கிய காரணமாக அமைந்தது. காய்கறிகள், பழங்கள், உடன் மீன், வாசனைத் திரவியங்கள் மற்றும் குடிபானங்கள் போன்ற வேறு உணவு வகைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட அனேகமான பொருட்கள் மீதான  இறக்குமதிச் செலவினம் 2019 திசெம்பரை விட குறைவாகக் காணப்பட்டது.

**இடைநிலைப் பொருட்கள்**: இடைநிலைப் பொருட்கள் இறக்குமதி மீதான செலவினமானது உலக சந்தையில் எரிபொருள் விலைகளில் குறைவின் காரணமாக எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினத்தில் 29.5 சதவீத வீழ்ச்சியொன்றினால் தூண்டப்பட்டு 2019 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2020 திசெம்பரில் 9.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2020 திசெம்பரில் மசகெண்ணெயின் சராசரி இறக்குமதி விலையானது 2019 திசெம்பரின் பீப்பாயொன்றுக்கு ஐ.அ.டொலர் 71.78 உடன் ஒப்பிடுகையில் பீப்பாயொன்றுக்கு ஐ.அ.டொலர் 51.89 ஆக இருந்தது. குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றினைக் காண்பித்த ஏனைய இடைநிலைப் பொருள் வகைகள் புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள், வைரங்கள் மற்றும் அரும் உலோகங்கள், அடிப்படை உலோகங்கள் (இரும்பு, உருக்கு அத்துடன் அலுமினியப் பொருட்கள் போன்ற) பாம் எண்ணெய் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தது. குறிப்பிடத்தகளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்த இடைநிலைப் பொருள் இறக்குமதிகளை வளமாக்கி, கோதுமை (உயர்வான அளவுகள் காரணமாக), செயற்கை இறப்பர், சில இரசாயன உற்பத்திகள், விலங்குத் தீன் என்பன உள்ளடக்கியிருந்தன.

**முதலீட்டுப் பொருட்கள்:** மூன்று முக்கிய துணை வகைகளிலும் அதாவது இயந்திரம் மற்றும் உபகரணங்கள், கட்டடப் பொருட்கள் மற்றும் போக்குவரத்து சாதனங்களின் வீழ்ச்சியின் மூலம் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 2019 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2020 திசெம்பரில் 23.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இரும்பு மற்றும் உருக்குப் பொருட்கள், செரமிக் உற்பத்திகள் மற்றும் சீமெந்து, சில பொறியியல் சாதனங்கள் (பாரம்தூக்கிகள், மின்தூக்கிகள் மற்றும் தொங்கு கூடைகள், தானியக்க ஒழுங்குபடுத்தல் சாதனங்கள்) மருத்துவ மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள், வர்த்தக நோக்கத்திற்கான ஊர்திகள், போன்றவற்றின் இறக்குமதிகளில் குறிப்பாக வீழ்ச்சி அவதானிக்கக்கூடியதாக இருந்தது. எனினும், கணனிகள், வேளாண்மை இயந்திரங்கள், உழவு இயந்திரங்கள், போன்றவற்றில் இறக்குமதிச் செலவினத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

**இறக்குமதி அளவுச் சுட்டெண்கள்:** இறக்குமதி அளவுச் சுட்டெண்ணும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் 2020 திசெம்பரில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முறையே 14.0 சதவீதத்தினாலும் 0.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. இது குறைவான இறக்குமதி அளவுகளினதும் விலைகளினதும் ஒன்றிணைந்த தாக்கத்தின் மூலம் இறக்குமதிச் செலவினத்தில் வீழ்ச்சி ஏற்பட்டது என்பதனை குறித்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: மாதாந்த இறக்குமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)**

| வகை | திசெம்பர் 2019 (ஐ.அ.டொ. மில்) | திசெம்பர் 2020 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-திசெ 2019 (ஐ.அ.டொ. மில்) | சன-திசெ 2020 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **390.9** | **327.7** | **-16.2** | **3,956.5** | **3,401.7** | **-14.0** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 148.0 | 158.1 | 6.8 | 1,426.9 | 1,554.4 | 8.9 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 4.0 | 3.4 | -13.9 | 36.1 | 33.6 | -7.1 |
| பால் உற்பத்திகள் | 29.9 | 31.0 | 3.8 | 311.9 | 333.8 | 7.0 |
| காய்கறிகள் | 40.5 | 39.6 | -2.3 | 310.0 | 352.9 | 13.8 |
| கடலுணவு | 15.3 | 13.0 | -15.1 | 214.6 | 188.6 | -12.1 |
| சீனி மற்றும் சிற்றூண்டிகள் | 21.3 | 29.8 | 39.9 | 201.2 | 277.1 | 37.7 |
| வாசனைத்திரவியங்கள் | 13.3 | 11.5 | -12.9 | 115.4 | 126.9 | 9.9 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 23.8 | 29.7 | 24.8 | 237.7 | 241.6 | 1.6 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 242.8 | 169.7 | -30.1 | 2,529.6 | 1,847.3 | -27.0 |
| தனியாள் ஊர்திகள் | 83.9 | 0.5 | -99.5 | 815.7 | 282.9 | -65.3 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 54.7 | 55.0 | 0.6 | 552.6 | 595.5 | 7.8 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 19.2 | 22.4 | 17.1 | 206.6 | 174.2 | -15.7 |
| புடவை மற்றும் ஆடைப்பொருட்கள் | 24.0 | 18.3 | -23.8 | 275.1 | 200.7 | -27.1 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 21.6 | 37.3 | 72.6 | 247.2 | 268.4 | 8.6 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 16.7 | 17.7 | 6.1 | 171.9 | 146.9 | -14.5 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 22.7 | 18.4 | -18.8 | 260.5 | 178.7 | -31.4 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **956.4** | **865.0** | **-9.6** | **11,369.6** | **9,076.5** | **-20.2** |
| எரிபொருள் | 333.2 | 235.1 | -29.5 | 3,891.6 | 2,542.6 | -34.7 |
| இதில் மசகெண்ணெய் | 50.2 | 38.1 | -24.1 | 970.7 | 583.0 | -39.9 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 259.0 | 162.9 | -37.1 | 2,706.4 | 1,742.2 | -35.6 |
| நிலக்கரி | 24.0 | 34.1 | 41.8 | 214.6 | 217.3 | 1.3 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 23.9 | 11.1 | -53.4 | 201.4 | 117.2 | -41.8 |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 248.3 | 234.8 | -5.4 | 2,909.4 | 2,335.1 | -19.7 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 37.6 | 36.6 | -2.6 | 457.3 | 383.1 | -16.2 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 19.3 | 22.5 | 16.4 | 187.9 | 200.8 | 6.9 |
| கோதுமை மற்றும் சோளம் | 20.1 | 41.9 | 108.9 | 346.4 | 384.4 | 11.0 |
| அடிப்படை உலோகங்கள் | 50.7 | 33.7 | -33.6 | 562.8 | 460.3 | -18.2 |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 54.2 | 52.7 | -2.8 | 612.9 | 540.2 | -11.9 |
| இரசாயன உற்பத்திகள் | 67.1 | 82.1 | 22.5 | 831.5 | 831.5 | 0.0 |
| வளமாக்கி | 17.4 | 30.4 | 75.0 | 221.4 | 258.9 | 16.9 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 18.2 | 20.3 | 11.5 | 238.9 | 218.7 | -8.5 |
| கனிம உற்பத்திகள் | 12.2 | 13.3 | 8.6 | 243.3 | 168.9 | -30.6 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 54.3 | 50.5 | -7.0 | 664.8 | 634.9 | -4.5 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **435.5** | **332.8** | **-23.6** | **4,602.6** | **3,563.2** | **-22.6** |
| பொறி மற்றும் கருவிகள் | 238.5 | 211.2 | -11.5 | 2,489.7 | 2,176.1 | -12.6 |
| கட்டடப் பொருட்கள் | 117.0 | 104.7 | -10.5 | 1,508.7 | 1,035.6 | -31.4 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 78.2 | 16.6 | -78.8 | 596.6 | 348.3 | -41.6 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 1.7 | 0.3 | -83.5 | 7.6 | 3.2 | -57.8 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **1.4** | **1.1** | **-22.8** | **8.3** | **14.0** | **68.8** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,784.2** | **1,526.6** | **-14.4** | **19,937.1** | **16,055.4** | **-19.5** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **1,451.0** | **1,291.6** | **-11.0** | **16,045.4** | **13,512.8** | **-15.8** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) பயறு, வெங்காயம், உருளைக்கிழங்கு, பருப்பு மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

**சுற்றுலாவினை மீள ஆரம்பிப்பதற்கான முன்னோடிக் கருத்திட்டத்தினைத் தொடங்கியதன் மூலம் 2020 திசெம்பரில் சில சுற்றுலாப் பயணி வருகைகள் பதிவாகின.** அதற்கமைய 2020 திசெம்பரில் உக்ரைனிலிருந்து 393 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்தனர். இதன் விளைவாக மொத்த சுற்றுலாப் பயணி வருகைகள், 2019இல் 1,913,702 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 2020இல் 507,704 வருகைகளாகப் பதிவாகின. அதற்கமைய சுற்றுலாப் பயணி வருகைகளின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்ற சுற்றுலாவிலிருந்தான திரண்ட வருவாய்கள் 2020 இல் ஐ.அ.டொலர் 957 மில்லியனாகவிருந்தது.

**தொழிலாளர் பணவனுப்பல்கள் 2020 திசெம்பரில் சாதனைமிக்க உயர்வொன்றுக்கு அதிகரித்தது.** தொழிலாளர் பணவனுப்பல்கள், 2020 திசெம்பரில் ஐ.அ.டொலர் 813 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு 22.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 2020 யூனிலிருந்து அவதானிக்கப்பட்ட அதிகரிப்பு ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 7,104 மில்லியனை அடைவதற்கு 2020இல் தொழிலாளர் பணவனுப்பல்கள் 5.8 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றை பதிவுசெய்வதற்கு உதவியது.

**வரைபடம் 8: மாதாந்த சுற்றுலாப்பயணிகள் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி

**வரைபடம் 9: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

**அரசாங்கப் பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடு, மாத காலப்பகுதியில் சிறிதளவான தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது.** 2020 திசெம்பரில் ரூபாய் பெயர்குறிக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தையில் ஐ.அ.டொலர் 10 மில்லியன் தொகையுடைய வெளிநாட்டு முதலீட்டு தேறிய வெளிப்பாய்ச்சலொன்று பதிவாகி 2020 காலப்பகுதியில் திரண்ட தேறிய உட்பாய்ச்சலை ஐ.அ.டொலர் 553 மில்லியனாக அதிகரித்தது. ரூபாய் பெயர்குறிக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீட்டின் மொத்த வெளிநின்ற கூட்டுத்தொகை 2020 திசெம்பர் இறுதியளவில் ஐ.அ.டொலர் 37 மில்லியனாக குறைவாகக் காணப்பட்டது.

2020 திசெம்பரில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் இரண்டாந்தரச் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 16 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல்கள் காணப்பட்டன. திரண்ட அடிப்படையில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை 2020 காலப்பகுதியில் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டிலிருந்தும் ஐ.அ.டொலர் 225 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது.

அதேவேளை, அரசாங்கத்திற்கான நீண்டகாலக் கடன்கள், 2020 திசெம்பரில் ஐ.அ.டொலர் 9 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது. அரசாங்கத்திற்கான மொத்த உட்பாய்ச்சல்கள், 2019இன் ஐ.அ.டொலர் 6,570 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இல் ஐ.அ.டொலர் 2,002 மில்லியன் தொகையாக இருந்தது.

## பன்னாட்டு ஒதுக்குகள்

**2020 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 5.7 பில்லியனாகவிருந்தது.** இத்தொகை 4.2 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகும். மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்குகின்ற மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2020 திசெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 8.5 பில்லியனாக விளங்கி 6.4 மாதங்களைக் கொண்ட இறக்குமதிகளுக்கு போதுமானதாகவிருந்தது.

**வரைபடம் 10: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

**இலங்கை ரூபா மீது 2020 திசெம்பர் காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க தேய்மான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.** குறிப்பாக ஊக சந்தை நடத்தை மூலம் பிரதானமாகத் தூண்டப்பட்ட, அத்தகைய அவ்வப்போதான தளம்பல் காலப்பகுதிக்கு மத்தியிலும் கூட ஐ.அ.டொலருக்கெதிராக ரூபாவின் ஒட்டுமொத்தத் தேய்வு 2020 இல் 2.6 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. 2020 இல் மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தேறிய அடிப்படையொன்றில் ஐ.அ.டொலர் 283 மில்லியனை ஈர்க்கக்கூடியதாக இருந்தது. தேய்மான அழுத்தம் 2021 சனவரியில் மீண்டும் தோற்றம்பெற்றது, ஊகத்தினைத் தடுப்பதற்காக உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் பின்பற்றப்பட்டு வருகின்ற தற்காலிக ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகள் மூலம் 2021 சனவரியில் பிந்திய காலப்பகுதியில் ரூபா மீண்டும் ஸ்திரமடைந்தது. அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலித்து 2021 இல் 2021 பெப்புருவரி 11 வரையில் யூரோ, ஸ்ரேலிங் பவுண், யப்பானிய யென், அவுஸ்திரேலிய டொலர் மற்றும் இந்திய ரூபா என்பவற்றுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தது.

**வரைபடம் 11: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2019 | 2020 | (2021 பெப்புருவரி 11 வரை) உயர்வு (+)/ தேய்வு (-) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | +0.6% | -2.6% | -4.2% |
| யூரோ | +2.6% | -11.2% | -2.7% |
| பவுண் ஸ்ரேலிங் | -2.8% | -6.2% | -5.4% |
| யப்பானிய யென் | -1.0% | -7.5% | -2.8% |
| அவுஸ்திரேலிய டொலர் | +1.3% | -11.4% | -4.3% |
| இந்தியன் ரூபா | +2.6% | 0.0% | -4.6% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி